**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 343/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா.4 |
| Name | : | திரு. ரவி |
| Father's Name/Husband Name: | | திரு. தங்கராசு |
| Village | : | பீல்வாடி |
| Taluk | : | பெரம்பலூர் |
| Age | : | 56 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 28.01.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி 1 சகுந்தலா ஆஜர். எதிரி 2,3 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து தற்போது சென்னையில் ஆட்டோ ஓட்டுநராக பணி புரிந்து வருகிறேன். சாட்சி அ.சா.1யை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது அல்ல. ஆனால் அதுபோன்று உள்ளது. கடந்த 4–5 ஆண்டுகளுக்கு முன்பு வெற்றுத்தாளில் பீல்வாடி அருகே உள்ள டீக்கடையில் நான் இருந்தபோது போலிசார் என்னிடம் கையெழுத்து பெற்றார்கள். நானும் ராஜாங்கம் என்பவரும் அங்கிருந்து கையொப்பம் செய்தோம். எதற்காக வெள்ளைத்தாளில் வாங்கினார்கள் என்றோ, எந்த வழக்கிற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. ராஜாங்கம் என்பவர் கடந்த ஓராண்டிற்கு முன்பு வயது மூப்பின் காரணமாக இறந்துவிட்டார். அந்த இறப்பு நிகழ்வில் நான் கலந்து கொண்டேன். கையெழுத்து வாங்கிய தேதி, நேரம், மாதம் எனக்கு நினைவில்லை. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 04.09.2020ம் தேதியன்று மதியம் 2 மணியளவில் வீட்டிற்கு ராஜாங்கம் என்பவருடன் வந்து கொண்டிருந்தபோது சாட்சி செங்கம்மாள் மற்றும் சகுந்தலா குடும்பத்திற்கும் இடையே நடந்த வயல்காட்டு பிரச்சனை சம்மந்தமாக ஒருவருக்கொருவர் திட்டி அடித்துக் கொண்டதாக சொன்ன இடத்தில் போலிசார் விசாரித்து பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அப்போது நானும் ராஜாங்கம் என்பவரும் சம்பவயிடம் சாட்சியாக பார்வை மகஜரில் கையொப்பம் செய்துவிட்டு அதுசம்மந்தமாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரிக்கெதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று பிரதிநிதித்துவம் செய்யப்பட்டது. அதனால் குறுக்கு விசாரணை இல்லை.**

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.